# ஐங்குறுநூற்றுக் குறிஞ்சித்திணையில் உள்ளுறை உவமம்

*ஏ. கோமதி*
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ் கலை அறிவியல் கல்லூரி
மயிலம்

மலர்: 4
இதழ்: 3
மாதம்: ஜனவரி
வருடம்: 2020
P-ISSN: 2454-3993
E-ISSN: 2582-2810

## முன்னுரை

சங்க இலக்கியங்கள் என்று அழைக்கப்படுபவை எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் ஆகும். எட்டுத்தொகை அகநூல்களில் ஒன்று ஐங்குறுநூறு. ஐங்குறுநூறு, ஐந்து திணை களாகப் பகுக்கப்பட்டுத் திணை ஒவ்வொன்றுக்கும் நூறு பாடல்கள்வீதம் ஐந்நூறு பாடல்களைக்கொண்டு விளங்குகிறது. ஐங்குறுநூற்றில் ஒவ்வொரு திணையும் ஒரு புலவர் வீதம் ஐந்து புலவர்கள் பாடியுள்ளமையை அறிய முடிகிறது. ஐங்குறுநூற்றுக் குறிஞ்சித்திணையில் இடம்பெற்ற நூறு பாடல்களில் கேழல் பத்தில் இடம் பெற்றுள்ள உள்ளுறை உவமத்தைப் பற்றி ஆய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## உள்ளுறை உவமம்

தொல்காப்பியம் உள்ளுறை என்பதற்குத் தனியே இலக்கணம் வகுக்கவில்லை. மாறாக உள்ளுறை உவமத்தின் வகைகள் ஐந்து என்பதையே சுட்டியுள்ளார். உள்ளுறை உவமம் என்பது

**புலவன் ஒரு கருத்தை உள்ளத்திலே எண்ணிக்கொண்டு அக்கருத்து வெளிப்படையாகக் கூறப்படும் கருப்பொருளோடு ஒத்து அமைவதாய் உட்பொருளைக் கூறப்படுவது உள்ளுறை உவமம் ஆகும். இதனை,**

> **“உள்ளுறுத்து இதனொடு ஒத்துப் பொருள் முடிக என**
> **உள்ளுறுத்து உரைப்பதே உள்ளுறை உவமம்”**
> ***(தொல்-பொருள்-அகத்-நூற்.48)***

எனும் நூற்பா மூலம் உணரமுடிகிறது.

### *1.* கேழல் (பன்றி) தினை உண்ணல்

கேழல் தினையை வயிறு நிறைய உண்டதால், மயக்கம் ஏற்பட்டு மலைப்பக்கத்தில் உறங்கும். அத்தகைய மலைக்குச் சொந்தமான தலைவன் என்னுடன் கொண்டிருந்த களவு ஒழுக்கத்தை நம் தந்தை

அறிந்திருப்பார் என அஞ்சி இங்கு நம்மைக் காண வராமல் இருக்கிறார் என மறைந்திருக்கும் தலைவனுக்கு உரைப்பது போலத் தோழி தலைவியிடம் கூறுவதை,

**"மென்தினை மேய்ந்த தறுகட் பன்றி**
**வன்கல் அடுக்கத்துத் துஞ்சும் நாடன்"**
**(ஐங்.261)**

எனும் பாடல் அடியால் உள்ளுறை உவமத்தை உணர முடிகிறது.

**"ஆங்காங் கொழுக ஒழுக்க முண்டே**
**ஓங்கிய சிறப்பின் ஒரு சிறை யான"**
**(தொல்.களவி.43)**

எனும் நூற்பாவும் இங்குக் குறிப்பிடற்குரியது. இதேபோன்று பன்றி, தினையை மேய்ந்து உறங்குவதாக ஐங் - 268, 262 பாடல் அடிகள் சான்றளிக்கின்றன.

**2. தினையை உண்டு கேழல் தன் துணையுடன் உறங்குதல்**

சிறிய தினையை உண்ட கேழல் தன் துணையுடன் மலைப்பக்கத்திலே உறங்குவது எப்படி இருக்கிறது எனில், தலைவன் தலைவியைக் களவில் புணர்ந்துவிட்டுச் சென்று மனையிலேயே தங்குவதைக் குறிப்பிடுகிறது. தலைவன் தன்னைத் திருமணம் செய்துகொள்ளாமல் இருப்பதால் தனக்குத் துன்பம் வந்து விட்டதை எண்ணி தலைவி வருந்திக் கொண்டிருக்கையில் அதனைக் கண்டு தோழி தலைவியே, தலைவன் உன்னைத் திருமணம் செய்வதே உனக்கு உண்டான நோயைத் தீர்க்கும் அருமருந்தாகும் என்று கூறுவதனை,

**"சிறுதினை மேய்ந்த தறுகண் பன்றி**
**துறுகல் அடுக்கத்துத் துணையொடு வதியும்**
**மருந்தும் அறியுங் கொல் தோழி! அவன்**
**விரும்பே" (ஐங்.262 பா)**

எனும் பாடல் உள்ளுறை உவமத்தால் உணர்த்துகிறது. கற்களிடையே வதிதல் பற்றி நற்றிணையில் உரைப்பதை,

**" ......................................சிறுகட்பன்றி**
**.......................................................**
**.......................................................**
**கல்லளைப் பள்ளி வதியும் நாடன்"**
**(நற்- 98)**

எனும் பாடலடி எடுத்தியம்புகிறது. இதனைத் தொல்காப்பியத்தில்,

**"அச்சம் நீடினும்**
**பிரிந்த வழிக் கலங்கினும், பெற்றவழி**
**மலியினும்" (தொல்.களவு - 20)**

எனும் தொல்காப்பிய நூற்பா வலியுறுத்துகிறது.

**3. கேழல் பொன்னிறத்தினை உண்ணல்**

கொல்லையில் விதைத்த தினை பொன்போன்ற நிறத்தினை உடையது. ஆனால் கேழல் (பொன்னை உரைத்துப் பார்க்கின்ற மாற்றுக்கல்) கட்டளைக் கல்லின் நிறத்தை உடையது. அத்தகைய மலைநாட்டையுடைய தலைவன் திருமண ஏற்பாட்டோடு வந்ததைக் கண்ட தலைவி, தான் இழந்த என்னுடைய அழகு மீண்டும் வந்தது என்ற செய்தியைத் தன்னுடைய தோழியிடம் கூறுகிறாள்.
இதனை,

**"நன்பொன் அன்ன புனிறுதீர் ஏனல்**
**கட்டளை அன்ன கேழல் மாந்தும்**
**.. ..**
**வந்ததன் வந்தன்று தோழி என் நலனே"**
**(ஐங். 263)**

எனும் பாடல் சுட்டுகிறது. இப்பாடலில் கேழல் தினையை உண்ணும் செய்தியில் உள்ளுறை உவமம் சுட்டப்படுகிறது. தினை பற்றிக் கூறுவதனை,

**“புனவன் துடவைப் பொன்போல் சிறுதினை” (குறுந்.133)**

**“புனிறுதீர் பெருங்குரல் நற்கோள் சிறுதினை” (குறிஞ்.37-8)**

**“பரூஉ மயிர்ப் பன்றி பொன்னுரை கட்டளை கருப்பக் காண்வரக்**
**கிளையமல் சிறுதினை விளைகுரல் மேய்ந்து: (அகம்.178)**

எனும் பாடல் அடிகள் எடுத்தியம்புகின்றன. இதனைத் தொல்காப்பியத்தில்,

**“வரைவு தலைவரினும் களவறி வுறினும்**
**தமர்காத்த காரண மருங்கினும்”**
**(தொல்.களவு - 20)**

எனும் நூற்பா வலியுறுத்துகின்றது.

**4. கேழல் (பன்றி) தன் குட்டியைப் பாது காத்தல்**

புலியால் கொல்லப்பட்டுத் தன் மனைவி இறந்தபின் தன் குழந்தையைத் தானே எடுத்து வளர்க்கின்ற கேழலைப்போலத் தனக்கு ஒரு புதல்வன் இருக்கிறான் என்பதை மறந்து தலைவன் புதிய பரத்தையரை நாடிச் செல்கிறான். அஃறிணை உயிரினமான கேழல் தன் பிள்ளையைப் பாதுகாப்பதுகூட மனிதனாய் இருக்கிற தலைவனுக்குத் தெரியவில்லை எனத் தலைவனிடம் இருந்து தூதுவனாக வந்த பாணனுக்குத் தலைவி கூறுகிறாள். இதனை,

**“புலிகொல் பெண்பாற், பூவரிக் குருளை**
**வளைவன் மருப்பிற் கேழல் புரக்கும்**
**...**
**பொன்போற் புதல்வனோ என்னித் தோனே” (ஐங்.265)**

எனும் பாடல் அடிகள் குறிப்பிடுகின்றன. “பொன்போல் புதல்வன்” எனப் புறநானூறு 9ஆவது பாடல் சான்று பகர்கிறது. இதனை வள்ளுவரின்,

**“பெறுமவற்றுள் யாமறிவதில்லை யறிவறிந்த**
**மக்கட்பே றல்ல பிற” (குறள் - 61)**

எனும் குறள் எடுத்து இயம்புகிறது. இதனைத் தொல்காப்பியத்தில்,

**“வாயிலின் வரூஉம் வகையொடு தொகைஇக் கிழவோள் செப்பல் கிழவது என்ப: (தொல்.கற்பி.20)**

என வலியுறுத்துகிறது.

**6. கேழல் (பன்றி) நெல் உண்ணல்**

ஆண் கேழல், காவலரை ஏமாற்றிவிட்டு ஐவனநெல்லை உண்ணுகின்ற நாடனாகிய தலைவன், தலைவிமீது அன்பு மொழி பேசி அவளைக் களவில் புணர்ந்து அவளுடைய அழகு நலனை நுகர்ந்து செல்வதையே குறியாகக் கொண்டானே அன்றி, அவளைத் திருமணம் செய்துகொள்ள நினைக்கவில்லை எனத் தோழி குறிப்பால் உணர்த்துவதாக அமைந்த பாடலில் உள்ளுறை உவமம் குறிப்பிடுகிறது. இதனை,

**“சிறுகண் பன்றிப் பெருஞ்சின ஒருத்தல்**
**........................................................**
**ஐவனங் கவரும் குன்ற நாடன்”(ஐங்.267)**

எனும் பாடலடிகள் உணர்த்துகின்றன. இதனை

**“வரைவுடன் பட்டோர்க் கடாவல் வேண்டினும்”**
**(இளம்-தொல்-பொருள்-களவு-23)**

எனும் தொல்காப்பிய நூற்பா உணர்த்துகிறது.

**முடிவுரை**

களவு ஒழுக்கத்தை தந்தைக்குத் தெரிந்ததால்தான் தலைவன். தன்னைக் காண வரவில்லையே எனத் தலைவி தலைவனை நினைத்து வருந்துவதை

அறிய முடிகிறது. தன்னைக் களவில் கூடி இன்புற்றுத் திருமணம் செய்துகொள்ளாமல் காலம் நீட்டிக்கும் தலைவனே தனக்கு உண்டான துன்பத்திற்குக் காரணம் எனத் தலைவி, தன் தோழியிடம் கூறி வருந்து வதை உணர்த்துகிறது. தலைவன் தன்னைத் திருமணம் செய்யும் ஏற்பாட்டோடு வந்ததைக் கண்டவுடன், தான் இழந்த தன்னுடைய அழகு மீண்டும் வந்ததைத் தன் தோழியிடம் தலைவி கூறுவதை இவ்வாய்வின் மூலம் காண இயலுகிறது.

## துணை நின்ற நூல்கள்

1. இளம்பூரணர், 2005, தொல்காப்பியம் பொருளதிகாரம் - கௌரா ஏஜென்சீஸ், சென்னை - 5.
2. சோமசுந்தரனார், பொ.வே.1961, ஐங்குறுநூறு 7, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - 18.
3. சோமசுந்தரனார், பொ.வே.1961, குறுந்தொகை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
4. சோமசுந்தரனார், பொ.வே.1961, அகநானூறு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
5. பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் - 1967, நற்றிணை நானூறு சைவ சித்தார்ந்த நூற்பதிப்புக்கழகம் - சென்னை.
6. பரிமேலழகர் 2007, திருக்குறள், சைவ சித்தார்ந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.